Government of Kerala
1984

Reg. No. KL/TV(N)/12

# KERALA GAZETTE

SUPPLEMENTS

PUBLISHED BY AUTHORITY

Vol XXIX] Trivandrum, Tuesday, 20th March 1984 / 30th Phalguna 1905 (Saka) [No. 12

## PART I

## CONTENTS

PAGE

**Labour Department**

1. *Awards on Industrial Disputes* :
Labour Court, Quilon ..39/83

**Transport, Fisheries and Ports Department**

2. The Kerala Motor Vehicle (Amendment) Rules, 1984 1—2

**Section ii**

3. Prohibition of the import of certain drugs .. 1

**Section iii**

4. The Kerala Appropriation (No. 10) Act, 1983 (Tamil Version) .. 1—3

5 The Kerala Fishermen Welfare Societies (Amendment) Ordinance, 1983 (Tamil Version) .. 1—2

6. The Kerala Municipalities (Amendment) Ordinance, 1983 (Tamil version) .. 1—2

7. The Kerala Education (Amendment) Ordinance, 1983 (Tamil version) .. 1—2

8. The Kerala Public Buildings (Eviction of Unauthorised Occupants) Amendment Ordinance, 1983 (Tamil version) .. 1—3


**Section iv**


9-17. **S R.O. Nos.—253, 254, 255, 256, 257, 258, 259, 260, and 264/1983.**

## GOVERNMENT OF KERALA

**Labour (A) Department**

NOTIFICATION

G.O. (Rt.) No: 52/84/LBR. *Dated, Trivandrum, 13th January* 1984.

The award of the Labour Court, Quilon in respect of the dispute between (1) Smt. Mariamma Koshy (Nelson Motors Kayamkulam) Poosary Bungalow, Kayamkulam (2) Shri K. Thankachan (Nelson Motors, Kayamkulam) Poosary Bungalow, Kayamkulam (3) Shri K.C. Chacko (Nelson Motors, Kayamkulam) Poosary Bungalow, Kayamkulam and their workmen represented by the General Secretary, Kerala Private Motor Thozhilali Union, (CITU), Kayamkulam received by Government on 7-1-1984 is hereby published under section 17 of the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947).

By order of the Governor,

K. Sivadasan,

*Deputy Secretary to Government.*

**In the Labour Court, Quilon**

Friday the 30th day of December 1983/9th Pousha, 1905

*Present* :

Smt. C. VISALAKSHI AMMA, B.A., B.L.,

*Presiding Officer*

*In*

INDUSTRIAL DISPUTE No 39/83

*Between* :

1. Smt. Mariamma Koshy (Nelson Motors, Kayamkulam) Poosary Bunglow, Kayamkulam.
2. Shri K Thankachan (Nelson Motors, Kayamkulam) do.
3. Shri K.C. Chacko, do.

*And*

The Workmen of the above concern represented by the General Secretary, Kerala Private Motor Thozhilali Union. (CITU) Kayamkulam.

*Representations*:—

Shri P. Narayanan Nair,
Advocate,
Alleppey. } For *the Management*

GA. 211/S

## AWARD

This dispute between the Parties was referred to this Court for adjudication by the Government of Kerala as per G.O. (Rt.) No. 1002/83/LBR dated 3-9-1983.

The issue referred is:—

"Dismissal of the following workers:—

1. Sri K.K. Abraham (Driver)
2. Sri Babu John (Driver)
3. Sri J. Alexander (Conductor)".

In pursuance of summons issued the parties entered appearance. On 30-12-1982 to which date the case stood posted for statements, both parties were absent and no statements filed. It is submitted by the advocates representing both sides, that the matter has been settled, by the workers receiving compensation. It seems that there is no subsisting dispute between the parties. An award is passed accordingly.

This award shall come into force on the expiry of thirty days from the date of its publication in the Government Gazette.

C. VISALAKSHI AMMA,
*Presiding Officer.*

Kerala Gazette No. 12 dated 20th March 1984.
**PART I** **Section iv**

# GOVERNMENT OF KERALA

## Transport Fisheries and Ports (Transport-B) Department

## NOTIFICATION

G.O. (P) No. 14/84/TF&P *Dated, Trivandrum, 28th February* 1984.

In exercise of the powers conferred by clause (O) of sub-section (2) of Section 68 of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939), the Government of Kerala hereby make the following Rules further to amend the Kerala Motor Vehicles Rules, 1961, the same having been previously published under Notification No. 44 3/TB3/82/TF& P. dated the 17th May, 1982, in the Kerala Gazette Extraordinary No. 263 dated the 17th May, 1982, as required by sub-section (i) of Section 133 of the said Act, namely:—

### RULES

*Short title.*—These rules may be called the Kerala Motor Vehicle (Amendment) Rules, 1984.

2. *Amendment of rule* 224.—In the Kerala Motor Vehicles Rules, 1961, in Rule 224, for clause (iii) of sub-rule (i), the following clause shall be substituted namely:—

"(iii) (a) Limited Stop City Services. Upto window cream with green border and cream on the top.

(b) Ordinary City Services. Upto window cream with red border and cream on the top".

By order of the Governor,

V. A. AUGUSTINE,

*Additional Secretary to Government.*

## Explanatory Note

(This is not part of the notification, but is intended to bring out its main purport)

Rule 224 of the Kerala Motor Vehicles Rules, 1961 prescribes the colour Scheme adopted by the Kerala State Road Transport Corporation for its buses. No other public service vehicle is permitted to adopt the colour scheme prescribed for KSRTC services. But the present colour pattern of the city service buses of KSRTC does not comply with the provisions of Rule 224 of Kerala Motor Vehicles Rules, 1961. Hence the Government of Kerala consider it necessary to amend the said rule to give validity to the colour pattern adopted by the KSRTC in respect of city service buses. This notification is intended to achieve the above purpose.

# GOVERNMENT OF KERALA

## Health (D) Department

## NOTIFICATION

No. 64178/D2/83/HD. *Dated, Trivandrum, 2nd March* 1934.

The oll wing Notificatio Nı. G. S. R. 57' (E) dated the 23rd July, 1983 cf the Government of India, Mi iistry of Health and Family Welfare publi.h d in th: Gazette of I. d a, Extraord n ry, Part II, Section 3 sub-section (i) dated the 23rd July, 1983 is hereby republished for general information.

M.G.K. MURTHY,
*Secr tary to Government.*

## G VERNMENT OF INDIA

## Ministry of Health and Family Welfare

## NOTIFICATION

*New Delhi, the 23rd July* 1983.

G.S R. 577 (E).—Whereas the Central Govern nent is sa.isfied that the use of the dr gs spec fi d in the Tab e belo v is likely to invo ve r.k to human b i gs or animals and it is necessary and exp:die it in th: public interest so to do ;

Now, there fore, in exercise of powers conferred by section 10A of the Drugs and Cosmetics Act, 1940 (23 of 1940), the Central Gov rnment hereby prohibits the import into India of the said drugs, n amely:—

TABLE

1. Nialamide
2. Prac olol
3. Am dopyrine
4. Ph:nacetin
5. Methapyrilene, and its salts.

(No. X-11014/1/83-DMS Q PFA),
(Sd.)
S. V. SUBRAMANIYAN,
*Joint Secretary.*

Kerala Gazette No. 12 dated 20th March 1984
**PART I**
Section iii

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல்-எ) துறை

அறிவிக்கை

எண்: 12806-7/சட்டமியற்றல் (எ) 2/83/சட்டம்.

திருவனந்தபுரம், 1983 ஆகஸ்டு 5 / 1905 ஸ்ராவணு 14

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுத் தகவலுக்கென இதனால் பிரசுரிக்கப்படுகிறது. சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாவிற்கு 1983 ஆகஸ்டு 3-ம் நாள் ஆளுநரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றது.

ஆளுநர் ஆணைப்படி,
கெ. விஸ்வநாதன் நாயர்,
சட்டச் செயலாளர்.

## The Kerala Appropriation (No. 10) Act, 1983

### 1983-ன் 17-வது சட்டம்

### 1983-ன் கேரள நிதி ஒதுக்கீடு (எண் 10) சட்டம்

1978 மார்ச் 31-ம் நாள் முடிவடைந்த நிதியாண்டில் சில பணிகளுக்கு, அந்த பணிகளுக்கும் அந்த ஆண்டிற்கும் வழங்கப்பட்ட தொகைகளை விட மிகுதியாக செலவிடப்பட்ட தொகைகளைச் சரிக்கட்டுவதற்கு கேரள மாநில தொகுநிதியிலிருந்து பணங்களை ஒதுக்கீடு செய்வதனை அதிகாரப்படுத்த வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

தோற்றுவாய்.—1978 மார்ச் 31-ம் நாள் முடிவடைந்த நிதியாண்டில் சில பணிகளுக்கு, அந்த பணிகளுக்கும் அந்த ஆண்டிற்கும் வழங்கப்பட்ட தொகைகளை விட மிகுதியாக செலவிடப்பட்ட தொகைகளைச் சரிக்கட்டுவதற்கு கேரள மாநில தொகுநிதியிலிருந்து பணங்களை ஒதுக்கீடு செய்வதனை அதிகாரப்படுத்துவதற்கு வகை செய்ய அவசியமாகையால்;

இது இந்தியக் குடியரசின் முப்பத்துநான்காவது வருடம் பின்வருமாறு சட்டமாக்கப்படட்டும்:—

1. சுருக்கத்தலைப்பு.—(1) இச்சட்டம், 1983-ன் கேரள நிதி ஒதுக்கீடு (எண் 10) சட்டம் என அழைக்கப்படலாம்;

2. 1978 மார்ச் 31-ம் நாள் முடிவடைந்த நிதியாண்டிற்காக சில மிகுதிச் செலவை சரிக்கட்ட கேரள மாநில தொகுநிதியிலிருந்து ரூபாய் 32,77,90,687 வழங்கல்.—1978 மார்ச் 31-ம் நாள் முடிவடைந்த நிதியாண்டில் அட்டவணையின் கட்டம் (2)-ல் குறிப்பிடப்பட்ட பணிகள் சம்பந்தமாக அந்த பணிகளுக்கும் அந்த வருடத்திற்கும் வழங்கப்பட்ட தொகைகளுக்கும் மிகுதியான செலவுகளைச் தீர்ப்பதற்காக செலவழிக்கப்பட்ட தொகைகளைச் சரிக்கட்டுவதற்கு அட்டவணையின் கட்டம் (3)-ல் குறிப்பிடப்பட்ட மொத்தத் தொகையான முப்பத்திரண்டு கோடியே, எழுபத்தேழு லட்சத்து தொண்ணூறாயிரத்து அறுநூற்றி எண்பத்தேழு ரூபாய் கேரள மாநில தொகுநிதியிலிருந்து நல்கப்பட்டு செலவிட அதிகாரப்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்பட வேண்டும்.

3. ஒதுக்கீடு.—இந்த சட்டத்தின் கீழ் கேரள மாநில தொகுநிதியிலிருந்து நல்கப்படவும் செலவிடப்படவும் அதிகாரப்படுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட தொகை 1978 மார்ச் 31-ம் நாள் முடிவடைந்த நிதியாண்டு தொடர்பான அட்டவணையில் விளக்கப்பட்ட பணிகள் மற்றும் நோக்கங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்பட வேண்டும்.

அட்டவணை

(பிரிவுகள் 2 மற்றும் 3 பார்க்கவும்)

| தேவை எண் | பணிகள் மற்றும் நோக்கங்கள் | மிகுதியானவை | | |
|---|---|---|---|---|
| | | சட்டமன்றத்தால் வாக்களிக்கப் பட்டது ரூ. | தொகுநிதியில் சுமத்தப்பட்டது ரூ. | மொத்தம் ரூ. |
| (1) | (2) | | (3) | |
| III | நீதி நிர்வாகம் | .. | 19,674 | 19,674 |
| IV | தேர்தல்கள் | 6,00,609 | .. | 6,00,609 |
| VI | நிலவருவாய் | .. | 25,516 | 25,516 |
| | கடன் செலவுகள் | .. | 2,05,17,000 | 2,05,17,000 |
| XI | மாவட்ட நிர்வாகம் மற்றும் பலவகை | 2,58,398 | .. | 2,58,398 |
| XXXVIII | நீர்ப்பாசனம் | 23,72,058 | 3,784 | 23,75,842 |
| XLII | சுற்றுலா | 58,183 | .. | 58,183 |
| | பொதுக்கடன் திருப்பி அளிப்பு | .. | 30,39,35,465 | 30,39,35,465 |
| | மொத்தம் | 32,89,248 | 32,45,01,439 | 32,77,90,687 |

Kerala Gazette No. 12 dated 20th March 1984.
**PART I** **Section iii**

கேரள அரசு

சட்டம் (சட்டமியற்றல்-பி) துறை

அறிவிக்கை

எண்: 8199/சட்டமியற்றல் (பி) 1/83/சட்டம்.

திருவனந்தபுரம், 1983 ஜூன் 4 / 1905 ஜெயிஷ்டா 14

1983 ஜூன் 3-ம் நாள் ஆளுநரால் விளம்பர அறிவிக்கைச் செய்யப்பட்ட கீழ்க்காணும் அவசரச் சட்டம் பொதுத் தகவலுக்கென இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநர் ஆணைப்படி,
கெ. விஸ்வநாதன் நாயர்,
தனிச் செயலாளர் (சட்டம்)

## The Kerala Fishermen Welfare Societies (Amendment) Ordinance, 1983

1983-ன் அவசரச் சட்டம் 19

1983-ன் கேரள மீனவர் நலச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டம்

இந்தியக் குடியரசின் முப்பத்துநான்காவது வருடம் ஆளுநரால் விளம்பர அறிவிக்கை செய்யப்பட்டது.

1980-ன் கேரள மீனவர் நலச் சங்கங்கள் சட்டத்தை திருத்துவதற்கான ஒரு அவசரச் சட்டம்

தோற்றுவாய்.—கேரள மாநில சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரில் இல்லாதிருப்பதாலும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான சூழ்நிலைகள் நிலவிலுள்ளனவென கேரள ஆளுநர் திருப்தி அடைவதாலும்;

இப்போது, எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 213-ன் உட்பிரிவு (1)-ஆல் நல்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழ்க்காணும் அவசரச் சட்டத்தை விளம்பர அறிவிக்கை செய்ய கேரள ஆளுநர் மன முவந்துள்ளார்:—

1. சுருக்கத் தலைப்பும் தொடக்கமும்.—(1) இந்த அவசரச் சட்டம் 1983-ன் கேரள மீனவர் நலச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டமென அழைக்கப் படலாம்.

(2) இது உடனடி அமலில் வரும்.

2. 1981-ன் சட்டம் 7 தற்காலிகமாக திருத்தப்படல்.—இந்த அவசரச் சட்டம் அமலிருக்கும் கால அளவில், (இதன் பின்னர் முதற் சட்டமென அழைக்கப்படும்) 1930-ன் கேரள மீனவர் நலச் சங்கங்கள் சட்டம் (1981-ன் 7), பிரிவு 3 மற்றும் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்குட்பட்டு பலனுடையதாக இருக்கும்.

G. 1233/V.

3. <u>பிரிவு 9-ன் திருத்தம்.</u>—முதற் சட்டத்தின் பிரிவு 9-ல்,—

(i) துணைப்பிரிவு (1)-ற்குப் பதில் கீழ்க்காணும் காப்புவாசகம் சேர்க்கப்பட வேண்டும், அதாவது :—

"எனினும், இந்தச் சட்டம் அமலுக்கு வந்தபிறகு, ஒவ்வொரு சங்கத்தின் முதற்குழுவிலும், அரசினால் நியமிக்கப்பட்ட ஆறு அங்கங்களுக்குக் குறையாமலும், பத்து அங்கத்தினர்களுக்கு மிகாமலும் இருக்கவேண்டும்."

(ii) துணைப்பிரிவு (4)-ற்குப் பதில், கீழ்க்காணும் காப்புவாசகம் சேர்க்கப்படவேண்டும், அதாவது:—

"எனினும், இந்தச் சட்டம் அமலுக்கு வந்தபிறகு, முதற்குழுவில் நியமிக்கப்பட்ட ஒரு அங்கம் அவர் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று வருடக் காலத்திற்கு அப்பதவியிலிருப்பார்."

4. <u>பிரிவு 10-ன் திருத்தம்.</u>—முதற் சட்டத்தின் பிரிவு 10-ல் துணைப்பிரிவு (2)-ற்குப் பிறகு, கீழ்க்காணும் துணைப்பிரிவு உட்புகுத்தப்பட வேண்டும், அதாவது :—

"(3)

(எ) துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகுதியின்மைக்கு உட்பட்ட அல்லது உட்பட்டிருக்கின்ற அல்லது

(பி) தொடர்ச்சியான மூன்று அல்லது அதற்கும் அதிகமான கூட்டங்களில் குழுவின் விடுப்பில்லாமல் வராமலிருக்கின்ற எந்த அங்கத்தினரையும் அரசு, இந்த சட்டம் அமலுக்கு வந்தபிறகு முதற்குழுவிலிருந்து நீக்கம் செய்யலாம் ;

எனினும், உட்பிரிவு (எ)-ல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக நீக்கம் செய்யப்படும் அத்தகைய எந்த அங்கத்தினரையும், அவரது நியாயங்களைக் கேட்க வாய்ப்பளிக்காமல் நீக்கம் செய்யக் கூடாது."

பா. இராமச்சந்திரன்,
ஆளுநர்.

Kerala Gazette No. 12 dated 20th March 1984
PART I                                                                 Section iii

கேரள அரசு
சட்டம் (சட்டமியற்றல்-சி) துறை
அறிவிக்கை

என் 9933/சட்டமியற்றல் (சி) 2/83/சட்டம்.

திருவனந்தபுரம், 1983 ஆகஸ்டு 20 / 1905 ஸ்ராவணம் 29

1983-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி, ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட கீழ்க்காணும் அவசரச் சட்டம் பொதுத் தகவலுக்கென இதன் மூலம் பிரசுரிக்கப்படுகிறது.

ஆளுநர் ஆணைப்படி,
கெ. விஸ்வநாதன் நாயர்,
சட்டச் செயலாளர்.

## The Kerala Municipalities (Amendment) Ordinance, 1983

### 1983-ன் அவசரச் சட்டம் என் 24

### 1983-ன் கேரள நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டம்

இந்தியக்குடியரசின் முப்பத்துநான்காவது ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்டது.

1960-ம் ஆண்டின் கேரள நகராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கான ஒரு அவசர சட்டம்.

தோற்றுவாய்.—1982-ம் வருடம் செப்டம்பர் 30-ம் தேதி 1982-ன் கேரள நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டம் (1982-ன் 2) கேரள ஆளுநரால் விளம்பர அறிவிக்கை செய்யப்பட்டிருந்ததாலும்;

மேற்கூறப்பட்ட அவசரச் சட்டத்தை சட்டமன்றத்தின் ஒரு சட்டத்தால் அகற்றுவதற்கான ஒரு மசோதா, 1983-ம வருடம் பெப்ருவரி மாதம் 5-ம் தேதி தொடங்கி 1983-ம் வருடம் மார்ச் 30-ம் தேதி முடிவுற்ற கேரள மாநில சட்ட மன்ற கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட முடியாமலிருந்ததாலும் ;

மேற்கூறப்பட்ட அவசரச்சட்டத்தின் ஏற்பாடுகளை அமலில் இருக்கச் செய்வதற்காக 1983-ம் ஆண்டு ஏப்ரல் 6-ம் தேதி கேரள ஆளுநரால் 1983-ன் கேரள நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டம் (1983-ன் 10) விளம்பர அறிவிக்கை செய்யப்பட்டிருந்ததாலும் ;

1983-ன் 10-வது அவசரச் சட்டத்தை சட்டமன்றத்தின் ஒரு சட்டத்தின் மூலமாக அகற்றுவதற்கான ஒரு மசோதா, 1983 ஜூன் 20-ம் நாள் துவங்கி 1983 ஆகஸ்டு 4-ம் தேதி முடிவுற்ற கேரள மாநில சட்டமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்ற முடியாமலிருந்ததாலும் ;

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 213-ன் உட்பிரிவு (2)-ன் துணை உட்பிரிவு (எ)-ன் கீழ் 1983-ன் 10-வது அவசரச் சட்டம், 1983 ஆகஸ்டு 1-ம் நாள் செயல்படுவது நின்றுவிட்டபடியாலும்;

அந்த அவசரச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமலில் இருக்கச்செய்யாவிடில் இடர்கள் உருவாகும் என்பதாலும்;

கேரள மாநில சட்டமன்றம் கூட்டத்தொடரில் இல்லாமல் இருப்பதாலும், உடனடி நடவடிக்கை எடுப்பதற்குரிய சூழ்நிலைகள் நிலவிலுள்ளவெனக் கேரள ஆளுநர் திருப்தி அடைவதாலும்;

எனவே, இப்போது, இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 213-ம் விதியின் உட்பிரிவு (1)-ஆல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி பின்வரும் அவசரச் சட்டத்தினை விளம்பர அறிவிக்கைச் செய்ய கேரள ஆளுநர் மனமுவந்துள்ளார் :—

1. சுருக்கத்தலைப்பும் தொடக்கமும்.—(1) இந்த அவசரச் சட்டம் 1983-ன் கேரள நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டமென அழைக்கப்படலாம்.

(2) இது 1982 செப்டம்பர் 30-ம் தேதி அமலில் வந்திருப்பதாகக் கருதப்படும்.

2. 1961-ன் 14-ம் சட்டம் தற்காலிகமாகத் திருத்தப்படல்.—இந்த அவசரச் சட்டம் அமலில் இருக்கும்போது (இதன் பின்னர் முதற் சட்டமென குறிப்பிடப்படுகிற) 1960-ன் கேரள நகராட்சிகள் சட்டத்திற்கு (1961-ன் 14) பிரிவு 3-ல் குறிப்பிடப்பட்ட திருத்தங்களுக்குட்பட்டு பலனுடைத்தாகவிருக்கும்.

3. பிரிவு 412-ன் திருத்தம்.—முதற் சட்டத்தின் பிரிவு 412-ன் துணைப் பிரிவு (2)-ல் "நாற்பத்தைந்து மாதங்கள்" எனும் சொற்களுக்குப் பதிலாக "எழுபத்திரண்டு மாதங்கள்" எனும் சொற்கள் இடப்படவேண்டும்.

4. தவிர்ப்பு.—(இதன் பின்னர் மேற்கூறப்பட்ட அவசரச் சட்டம் எனக் குறிப்பிடப்படுகிற) 1983-ன் கேரள நகராட்சிகள் (திருத்த) அவசரச் சட்டம் (1983-ன் 10) செயல்படுவது நின்றுவிட்டபோதிலும்,—

(எ) மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட முதல் சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்ட அல்லது உண்டுபண்ணப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட ஏதேனும் காரியம் அல்லது எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட ஏதேனும் நடவடிக்கை இந்த அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட முதற்சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும்,

(பி) மேற்சொன்ன அவசரச் சட்டம் அமலில் இருப்பது நின்றுவிட்ட பிறகும் இந்த அவசரச் சட்டம் அரசிதழில் பிரசுரிக்கப்பட்ட தேதிக்கு முன் வரும், மேற்சொன்ன அவசரச்சட்டம் அமலில் இருப்பது நின்றுவிடாவிட்டால் மேற்சொன்ன அவசரச்சட்டத்தின் மூலமாக திருத்தப்பட்ட முதற் சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்டிருக்கக் கூடியதான ஏதேனும் காரியம் அல்லது எடுக்கப்பட்டிருக்கக் கூடியதான ஏதேனும் நடவடிக்கை இந்த அவசரச் சட்டத்தின் மூலமாக திருத்தப்பட்ட முதற்சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும்.

பா. இராமச்சந்திரன்,
ஆளுநர்.

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல்-சி) துறை

அறிவிக்கை

எண். 9941/சட்டமியற்றல்-சி 1/83/சட்டம்.

திருவனந்தபுரம், 1983 ஆகஸ்டு 20 / 1905 ஸ்ராவணு 29

1983 ஆகஸ்டு 20-ம் நாள் ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப்பட்ட பின்வரும் அவசரச் சட்டம் பொதுத்தகவலுக்கென இதன்மூலம் பிரசுரிக்கப்படுகிறது.

ஆளுநர் ஆணைப்படி,
கெ. விஸ்வநாதன் நாயர்,
சட்டச் செயலாளர்.

## The Kerala Education (Amendment) Ordinance, 1983

1983-ன் அவசரச் சட்டம் எண் 25

1983-ன் கேரள கல்வி (திருத்த) அவசரச் சட்டம்

இந்தியக் குடியரசின் முப்பத்துநான்காவது ஆண்டில் கேரள ஆளுநரால் விளம்பர அறிவிக்கைச் செய்யப்பட்டது.

1958-ன் கேரள கல்விச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான ஒரு அவசரச் சட்டம்.

தோற்றுவாய்.—1982-ன் கேரள கல்வி (திருத்த) மசோதா (1982-ன் 3) 1982 அக்டோபர் 11-ம் நாள் கேரள ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப் பட்டுள்ளபடியாலும்;

1983 பெப்ருவரி 25-ம் நாள் துவங்கி 1983 மார்ச் 30-ம் நாள் முடிவுற்ற கூட்டத்தொடரில் சட்டமன்றத்தின் ஒரு சட்டத்தால் மேற்சொன்ன அவசரச் சட்டத்தை இரத்துசெய்து ஒரு மசோதாவை நிறைவேற்ற முடியாததினாலும்;

மற்றும் மேற்சொன்ன அவசரச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிலவில் வைப்பதற்காக, 1983-ன் கேரள கல்வி (திருத்த) அவசரச் சட்டம் (1983-ன் 12) கேரள ஆளுநரால் 1983 ஏப்ரல் 6-ம் நாள் விளம்பர அறிக்கைச் செய்யப்பட்டது;

மற்றும் 1983 ஜூன் 20-ம் நாள் துவங்கி 1983 ஆகஸ்டு 4-ம் நாள் முடிவடைந்த கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடரில், 1983-ன் அவசரச் சட்டம் எண் 12ஐ மாற்றுவதற்காக ஒரு மசோதா கொண்டுவந்து இயற்ற இயலாததாலும்;

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 213-ன் உட்பிரிவு (2)-ன் துணை உட்பிரிவு (எ)-ன் கீழ் 1983-ன் அவசரச் சட்டம் எண் 12, 1983 ஆகஸ்ட் 1-ம் நாள் செயல்படுவது நின்றுவிடுவதாலும்;

அந்த அவசரச் சட்டத்தின் ஏற்பாடுகள் அமலில் இல்லாமல் இருந்தால் சிக்கல்கள் ஏற்படுமாகையாலும்;

கேரள சட்டமன்றப் பேரவை கூட்டத்தொடரில் இல்லாததாலும், உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தேவையான சூழ்நிலைகள் நிலவில் உள்ளன என கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

எனவே, தற்போது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 213-ன் உட்பிரிவு (1)-ஆல் நல்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பிரயோகித்து கேரள ஆளுநர் பின்வரும் அவசரச் சட்டத்தை விளம்பர அறிவிக்கைச் செய்ய மனமுவந்துள்ளார் :—

1. கருக்கத்தலைப்பு மற்றும் துவக்கம்.—(1) இந்த அவசரச் சட்டம் 1983-ன் கேரள கல்வி (திருத்த) அவசரச் சட்டமென அழைக்கப்படலாம்.

(2) இது 1982 அக்டோபர் 13-ம் நாள் அமலுக்கு வந்திருப்பதாகக் கருதப்பட வேண்டும்.

2. 1959-ன் சட்டம் எண். 6 தற்காலிகமாகத் திருத்தப்படல்.—(இதன் பின்னர் முதற்சட்டமென அழைக்கப்படும்) 1958-ன் கேரள கல்விச் சட்டம் (1959-ன் 6) இந்த அவசரச் சட்டம் அமலில் இருக்கும் கால அளவில் பிரிவு 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்குட்பட்டு பலனுடையதாக இருக்கும்.

3. பிரிவு 36-ன் திருத்தம்.—முதற் சட்டத்தின் பிரிவு 36-ன் துணைப்பிரிவு (1)-ல் "அரசு விதிகள் உண்டுபண்ணலாம்" எனும் வார்த்தைகளுக்கு முன் "முன்கால பலனோடு அல்லது பின்கால பலனோடு" எனும் வார்த்தைகள் உட்புகுத்தப்பட வேண்டும்.

4. தவிர்த்கல்.—(இதன்பின்னர் மேற்குறிப்பிட்ட அவசரச் சட்டமெனக் குறிப்பிடப்படும்) 1983-ன் கேரள கல்வி (திருத்த) அவசரச்சட்டத்தின் செயல்பாடு நின்றுவிட்டபோதிலும் :—

(எ) மேற்குறிப்பிடப்பட்ட அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்ட முதற்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எதுவும் அல்லது மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்ட எந்த நடவடிக்கையும், இந்த அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்ட முதற்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டதாக அல்லது மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

(பி) மேற்குறிப்பிட்ட அவசரச் சட்டத்தின் செயல்பாடு முடிவுற்ற பிறகு மற்றும் இந்த அவசரச் சட்டம் அரசு சான்றிதழில் பிரசுரிக்கப்படுவதற்கு முன் செய்யப்பட்ட எதுவும் அல்லது மேற்கொள்ளப்பட்ட எந்தச் செயலும் மேற்குறிப்பிட்ட அவசரச் சட்டம் செயல்படுவது நின்று விடாதிருக்குமாயின் மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தால் திருத்தப்பட்ட முதற்சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்டிருக்கக் கூடிய அல்லது மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடிய ஏதேனும் காரியம் அல்லது ஏதேனும் செயல், இந்த அவசரச்சட்டத்தால் திருத்தப்பட்ட முதற்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டதாகவோ அல்லது மேற்கொள்ளப்பட்டதாகவோ கருதப்பட வேண்டும்.

பா. இராமச்சந்திரன்,
ஆளுநர்.

Kerala Gazette No. 12 dated 20th March 1984
PART I Section iii

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல்-பி) துறை

அறிவிக்கை

எண் 9838/சட்டமியற்றல் பி-2/83/சட்டம்.

திருவனந்தபுரம், 1983 ஆகஸ்ட் 25 / 1905 பத்ரா 3

1983 ஆகஸ்ட் 20-ம் நாள் ஆளுநரால் விளம்பர அறிக்கை செய்யப் பட்ட கீழ்க்காணும் அவசரச் சட்டம் பொதுத்தகவலுக்கென இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது.

ஆளுநர் ஆணைப்படி,
கெ. விஸ்வநாதன் நாயர்,
சட்டச் செயலாளர்.

## The Kerala Public Buildings (Eviction of Unauthorised Occupants) Amendment Ordinance, 1983

### 1983-ன் அவசரச் சட்டம் எண் 27

### 1983-ன் கேரள பொதுக் கட்டிடங்கள் (முறைகேடாகக் கைக்கொண்டிருப் பவர்களை வெளியேற்றுதல்) திருத்த அவசரச் சட்டம்

இந்தியக் குடியரசின் முப்பத்துநான்காவது வருடம் கேரள ஆளுநரால் விளம்பர அறிவிக்கை செய்யப்பட்டது.

1968-ன் கேரள பொதுக் கட்டிடங்கள் (முறைகேடாகக் கைக்கொண்டிருப் பவர்களை வெளியேற்றுதல்) திருத்த சட்டத்தை மேலும் திருத்துவதற்கான ஒரு அவசரச் சட்டம்.

தோற்றுவாய்.—1983-ன் கேரள பொதுக் கட்டிடங்கள் (முறைகேடாக கைக்கொண்டிருப்பவர்களை வெளியேற்றுதல்) திருத்த அவசரச் சட்டம் (1983-ன் 4), கேரள ஆளுநரால் 1983 பெப்ருவரி 4-ம் நாள் விளம்பர அறிக்கை செய்யப் பட்டுள்ளபடியாலும் ;

மற்றும் 1983 பெப்ருவரி 25-ம் நாள் துவங்கி 1983 மார்ச் 30-ம் நாள் முடிவுற்ற கேரள மாநில சட்டமன்றப் பேரவை கூட்டத்தொடரில் இருந்தபோது மேற்குறிப்பிட்ட அவசரச் சட்டத்தை சட்டமன்றப் பேரவையின் ஒரு சட்டத் தால் மாற்றுவதற்கான ஒரு மசோதா கொண்டு வந்து அமல் நடத்த முடியாத தாலும் ;

மற்றும் மேற்குறிப்பிட்ட அவசரச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிலவில் வைக்க வேண்டியுள்ளதாலும், 1983-ன் கேரள பொதுக் கட்டிடங்கள் (முறைகேடாக கைக்கொண்டிருப்பவர்களை வெளியேற்றுதல்) திருத்த அவசரச் சட்டம் (1983-ன் 14) 1983 ஏப்ரல் 6-ம் நாள் கேரள ஆளுநரால் விளம்பர. அறிவிக்கை செய்யப் பட்டது;

மற்றும் 1983 ஜூன் 20-ம் நாள் துவங்கி 1983 ஆகஸ்ட் 4-ம் நாள் முடிவுற்ற கேரள மாநில சட்டமன்றப் பேரவை கூட்டத்தொடரில் இருந்தபோது 1983-ன் அவசரச் சட்டத்தின் எண் 14ஐ சட்டமன்றப்பேரவையின் ஒரு சட்டத்தால் மாற்றுவதற்கான ஒரு மசோதா கொண்டுவந்து அமல் நடத்த முடியாததாலும்;

மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 213-ன் உட்பிரிவு (2)-ன் துணை உட்பிரிவு (எ)-ன் கீழ், 1983-ன் அவசரச் சட்டம் எண் 14, 1983 ஆகஸ்ட் 1-ம் நாள் செயல்படுவது நின்றுவிடுவதாலும்;

மற்றும் அந்த அவசரச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிலவில் வைக்கவில்லையெனில் இடர்கள் உருவாகுமென்பதாலும்;

மற்றும் கேரள மாநில சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தொடரில் இல்லாதிருப்பதாலும் மற்றும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான சூழ்நிலை நிலவிலுள்ளவென கேரள ஆளுநர் திருப்தியுறுவதாலும்;

எனவே, இப்போது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 213-ன் உட்பிரிவு (1)-ஆல் நல்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பிரயோகித்து கேரள ஆளுநர் கீழ்க்காணும் அவசரச் சட்டத்தை விளம்பர அறிவிக்கைச் செய்ய மனமுவந்துள்ளார்.

1. <u>சுருக்கத்தலைப்பும் துவக்கவும்.</u>—(1) இந்த அவசரச் சட்டம் 1983-ன் கேரள பொதுக் கட்டிடங்கள் (முறைகேடாகக் கைக்கொண்டிருப்பவர்களை வெளியேற்றுதல்) திருத்த அவசரச் சட்டமென அழைக்கப்படலாம்.

(2) இது 1983 பெப்ருவரி 7-ம் நாள் அமலுக்கு வந்திருப்பதாகக் கருதப்பட வேண்டும்.

2. <u>1968-ன் சட்டம் எண் 25 தற்காலிகமாகத் திருத்தப்படல்.</u>—(இதன் பின்னர் முதற்சட்டமெனக் குறிப்பிடப்படும்) 1968-ன் கேரள பொதுக் கட்டிடங்கள் (முறைகேடாகக் கைக்கொண்டிருப்பவர்களை வெளியேற்றுதல்) சட்டம் (1968-ன் 25), இந்த அவசரச் சட்டம் அமலிலிருக்கும் கால அளவில் பிரிவு 3 முதல் 9 வரையில் (இரண்டு உட்பட) குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுக்குட்பட்டு பலனுடையதாகவிருக்கும்.

3. <u>பிரிவு 2-ன் திருத்தம்.</u>—முதற் சட்டத்தின் பிரிவு 2-ல், —

(1) உட்பிரிவு (எ) என்பது உட்பிரிவு (எஎ) என மறு எழுத்திடப்பட வேண்டும் மற்றும் அந்த உட்பிரிவுக்கு முன்னால் பின்வரும் உட்பிரிவுகள் புகுத்தப்பட வேண்டும், அதாவது :—

"(எ) "கம்பெனி" என்பது செலுத்தித் தீர்க்கப்பட்ட பங்கு மூலதனத்தின் ஐம்பத்தொன்று சதவிகதத்திற்கு குறையாத கேரள அரசினாலோ அல்லது மத்திய அரசும் கேரள அரசும் இணைந்தோ கைக்கொண்டுள்ள ஒரு கம்பெனி என்று பொருள்படும். மற்றும் அத்தகைய கம்பெனியின் ஒரு துணை கம்பனியும் உட்படுகிறது.

(எஎ) "கழகம்" எனில் ஏதேனும் மத்திய அல்லது மாநில சட்டத்தின் கீழ் அல்லது சட்டத்தால் உருவாக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட ஒரு கழகம் எனவும் கேரள அரசுக்குச் சொந்தமானது அல்லது அதனால் நிர்வகிக்கப்படுவது எனவும் பொருள்படும்."

(2) உட்பிரிவு (டி) ல், துவக்கப்பத்தியில் "அல்லது ஒரு தல அதிகாரக்குழு" எனும் வார்த்தைகளுக்குப்பிறகு "அல்லது ஒரு கம்பெனி அல்லது ஒரு கழகம்" எனும் வார்த்தைகள் உட்புகுத்தப்பட வேண்டும்.

4. <u>பிரிவு 3-ன் திருத்தம்.</u>—முதற் சட்டத்தின் பிரிவு 3-ல், உட்பிரிவு (எ)-ன் காப்பு வாசகத்திற்குப் பதிலாகக் கீழ்க்காணும் காப்பு வாசகம் இடப்பட வேண்டும், அதாவது ;—

"எனினும்—

(i) ஒரு தல அதிகாரக்குழுவின் காரியத்தில், அந்த தல அதிகாரக்குழுவின் நிர்வாக அதிகாரக்குழு ; மற்றும்

(ii) ஒரு கம்பெனி அல்லது ஒரு கழகத்தின் காரியத்தில் அந்த கம்பெனி அல்லது கழகத்தின் ஒரு அதிகாரி; எஸ்டேட் அதிகாரியாக நியமிக்கப்பட வேண்டும்."

5. பிரிவு 6-ன் திருத்தம்.—முதற் சட்டத்தின் பிரிவு 6-ன் துணைப்பிரிவு (2)-ல், "அல்லது தல அதிகாரக்குழு" எனும் வார்த்தைகளுக்குப் பிறகு "அல்லது கம்பெனி அல்லது கழகம்" எனும் வார்த்தைகள் உட்புகுத்தப்பட வேண்டும்.

6. பிரிவு 12-ன் திருத்தம்.—முதற் சட்டத்தின் பிரிவு 12-ன், துணைப்பிரிவு (2)-ல், "அல்லது ஒரு தல அதிகாரக்குழு" எனும் வார்த்தைகளுக்குப் பதில் "அல்லது ஒரு தல அதிகாரக்குழு அல்லது ஒரு கம்பெனி அல்லது ஒரு கழகம்" எனும் வார்த்தைகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

7. பிரிவு 13-ன் திருத்தம்.—முதற் சட்டத்தின் பிரிவு 13-ல் "அல்லது ஒரு தல அதிகாரக்குழுவிற்கு" எனும் வார்த்தைகளுக்குப் பதில், "அல்லது ஒரு தல அதிகாரக்குழு அல்லது ஒரு கம்பெனி அல்லது ஒரு கழகம்" எனும் வார்த்தைகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

8. பிரிவு 14-ன் திருத்தம்.—முதற் சட்டத்தின் பிரிவு 14-ல், "அல்லது தல அதிகாரக்குழு" எனும் வார்த்தைகளுக்குப் பின் "அல்லது கம்பெனி அல்லது கழகம்" எனும் வார்த்தைகள் உட்புகுத்தப்பட வேண்டும்.

9. பிரிவு 17-ன் திருத்தம்.—முதற் சட்டத்தின் பிரிவு 17-ல் "அல்லது ஒரு தல அதிகாரக்குழு" எனும் வார்த்தைகளுக்குப் பிறகு "அல்லது ஒரு கம்பெனி அல்லது ஒரு கழகம்" எனும் வார்த்தைகள் உட்புகுத்தப்பட வேண்டும்.

10. தவிர்த்தல்.—(இதன் பின் மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டமெனக் குறிப்பிடப்படும்) 1983-ன் கேரள பொதுக் கட்டிடங்கள் (முறைகேடாகக் கைக்கொண்டிருப்பவர்களை வெளியேற்றுதல்) திருத்த அவசரச்சட்டம் (1983-ன் 14) செயல்படுவது நின்று விட்டபோதிலும்,—

(எ) மேற்குறிப்பிட்ட அவசரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட முதற் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட எதுவும் அல்லது மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்ட எந்தச் செயலும் இந்த அவசரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட முதற் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டதாக அல்லது மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும்.

(பி) மேற்குறிப்பிட்ட அவசரச் சட்டம் செயல்படுவது நின்றுவிட்ட பின்னர் மற்றும் இந்த அவசரச் சட்டம் அரசிதழில் பிரசுரிக்கும் நாளுக்குமுன் மேற்கூறப்பட்ட அவசரச் சட்டம் செயல்படுவது நின்று விடாதிருந்தால் மேற்சொல்லப்பட்ட அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட முதற்சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்டிருக்கக் கூடிய ஏதேனும் காரியம் அல்லது மேற்கொள்ளப்பட்டிருக்கக் கூடிய ஏதேனும் செயல் இந்த அவசரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட முதற்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டிருப்பதாக அல்லது மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படவேண்டும்.

பா. இராமச்சந்திரன்,
ஆளுநர்.

# GOVERNMENT OF KERALA

## Home (SS.B) Department

## NOTIFICATION

*Dated, Trivandrum, 1st February* 1984.

G. O. (Ms.) No. 8/84/Home.

**S.R.O. No. 165/84.**—Whereas the places specified in the schedule below are of vital importance to the country;

And whereas information with respect thereto, or the destruction or obstruction thereof, or interference therewith, would be useful to an enemy;

